நாள்.02.03.2026
அசல் வழக்கு எண். 133/2023
பி.வா. சா.2
பெயர். சுப்பிரமணியன்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
குறுக்கு விசாரணை

வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் தெரியாது. வழக்கு சொத்தின் நான்கு எல்கைகள் தெரியுமா என்றால் தெரியும், கீழ்புறம் முடுக்கு மற்றும் வீடு, தென்புறம் தெரு, மேல்புறம் மற்றும் வடபுறம் வீடு உள்ளது. தாவா சொத்து தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் இசக்கி என்பவர் பெயரில் உள்ளது. தபசில் சொத்திற்கான பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் பார்த்தது இல்லை. வேறு வருவாய்துறை ஆவணங்களை ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் பார்த்தது இல்லை, இசக்கி என்பவருக்கு உயில் உள்ளது. இசக்கி என்பவருக்கு உயில் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சிதம்பரம் எழுதிக்கொடுத்தார். எந்த தேதியில் உயில் எழுதப்பட்டது என்றால் தேதி தெரியாது.

உயில் எழுதப்பட்டது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் வழக்கின் மூலம் தெரிய வந்தது. உயில் இருப்பதை பற்றி எனக்கு பிரதிவாதி சொன்னார் என்றால் சரியல்ல, பிரதிவாதி வழக்கு நடக்கும் நேரத்தில் உயிலை படித்து பார்த்து சொன்னார். பிரதிவாதி என்னிடம் அசல் உயில் ஆவணத்தை காண்பித்தார் என்றால் சரிதான். உயிலை படித்து பார்த்தேன் என்றால் சரிதான், உயிலில் என்ன இருந்தது என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. சிதம்பரம் என்பவர் உயில் எழுதினார் பிரதிவாதி மீனாட்சி என்னிடம் சொன்னார் என்றால் சரியல்ல, நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். உயிலில் மொத்தம் எத்தனை பக்கங்கள் இருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை.

உயில் பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்படாத உயில். உயிலில் மொத்தம் எத்தனை சொத்துக்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் ஒரு வீடு மட்டும் தான். உயில் எத்தனை ரூபாய் பத்திர தாளில் எழுதப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. உயிலில் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது, என் பெயர் மட்டும் எழுத தெரியும். நான் பிரதிவாதி மீனாட்சியின் பக்கத்து வீட்டு காரர் என்றால் சரியல்ல, 5–6 வீடுகள் தள்ளி குடியிருக்கிறேன்.

என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் 5 பத்தியில் 10.02.1984 தேதிய உயிலில் பிரதிவாதி கணவர் இசக்கிமுத்து பெயரில் எழுதப்பட்டுள்ளதா சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரம்

எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. அதை போல் சிதம்பரம் என்பவர் உயில் எழுத வில்லை என்றால் சரியல்ல. சுடலைமுத்து எப்பொழுது காலம் சென்றார் என்றால் எனக்கு தெரியாது. சிதம்பரம் என்பவர் உயில் எதுவும் எழுதவில்லை என்றாலும், பிரதிவாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கான ஆவணங்கள் தற்போது வாதியின் பெயரில் உள்ளது என்றாலும் அது எனக்கு தெரிந்தும் மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.